**Sub Court, Eraniel**

O.S. No.5/2025
Date: 15.06.2026.
PW.1 - திரு. மரிய ஆன்றணி
சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.
பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

எனக்கு எத்தனை பெயர்கள் உள்ளது என்றால், ஒரே பெயர்தான் அது மரிய ஆன்றணி. என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.1 கடன் உறுதி சீட்டில் ஆண்டு, மாதம், தேதி என்ற வரிசையில் எழுதப்பட்டிருக்கிறது என்றால், ஆமாம். அந்த ஆவணத்தில் என்ன வருடம் எழுதப்பட்டிருக்கிறது என்றால் 2022 ஆம் ஆண்டு 7ம் மாதம் 18ம் தேதி என்று எழுதப்பட்டிருக்கிறது, ஆனால் நான் கொடுத்தது ஆகஸ்ட் மாதத்தில் தான் கொடுத்தேன். முத்திரைத்தாள் 18.08.2022ல் வாங்கியதாக காணப்படுகிறது என்றால், ஆமாம். முத்திரைத்தாளில் ஞானராஜ் கையெழுத்து இல்லை என்றால், இருக்கிறது. என்னிடம் காண்பிக்கப்படும் கடன் உறுதி சீட்டில் முத்திரைத்தாள் வாங்கியவர் என்று சொல்லப்படுகின்ற இடத்தில் ஞானராஜ் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றாலும், ஞானராஜ் எந்த இடத்திலும் கையெழுத்து போடப்படவில்லை என்றாலும், ஞானராஜ் கையெழுத்து உண்டு. கடன் உறுதி சீட்டு ஆவணம் போலியாக தயார் செய்யப்பட்டதால் தான் முதல் பக்கத்தில் ஞானராஜ் என்பவரின் கையெழுத்து கிடையாது என்றாலும், அதே போல் ஆவணம் எழுதுவதற்கு ஒரு மாதம் பின்னிட்டு முத்திரைத்தாள் வாங்கியதாக காணப்படுகிறது என்றால், தவறு. பத்திரத்தை பிரதிவாதி என்னிடம் கொண்டு வந்து தந்து விட்டு ரூபாய்.3,00,000/- பணத்தை 6 கட்டுகளாக வாங்கி சென்றார்.

பிரதிவாதி கடன் உறுதி சீட்டை என்னிடம் கொடுத்துவிட்டு ரூபாய்.3,00,000/- பணத்தை 6 கட்டுகளாக வாங்கி சென்றார் என்ற விவரத்தை நான் தாக்கல் செய்துள்ள வழக்கிலோ அல்லது முதல் விசாரணையிலோ சொல்லப்படவில்லை என்றால், எனக்கு தெரியாது என் வழக்கறிஞருக்கு தான் தெரியும். வா.சா.ஆ.1ல் சாட்சிகளாக யார் யார் கையெழுத்து போட்டு இருக்கிறார்கள் என்றால் ஒன்று என்னுடைய மனைவி மற்றொன்று பால் வாங்குவதற்காக என் வீட்டுக்கு வந்திருந்த

சுபாஷினி என்ற நபர். சுபாஷினி என்னுடைய உறவினர் என்றால், இல்லை. வா.சா.ஆ.1ல் 2ம் பக்கத்தில் பிரதிவாதி கையெழுத்து போட்டதாக சொல்லக் கூடிய இடத்தில் உள்ள கையெழுத்து பிரதிவாதியுடைய கையெழுத்து இல்லை என்றால், சரியல்ல. பிரதிவாதியை எனக்கு எத்தனை வருடமாக தெரியும் என்றால் 10, 12 வருடமாக தெரியும். நான் வெளிநாட்டுக்கு சென்று இருக்கும்பொதே அவர் பழக்கம். பிரதிவாதி உடைய வீடு என்னுடைய வீட்டில் இருந்து வடமேற்காக சுமார் 2 கிலோமீட்டர் தொலைவில் இருக்கிறது என்றால், சரியில்ல. 1 கிலோ மீட்டர் தொலைவில் தான் இருக்கும். எனக்கு சொந்தமான கடையை பிரதிவாதி வாடகைக்கு எடுத்திருந்தார் என்றால், இல்லை. எனக்கு சொந்தமான கடையை எனது உறவினர் மூலமாக எடுத்து 15 வருடங்களாக Welding Shop நடத்தி வந்தார் என்றால், சரியல்ல.

நான் கடையை வாடகைக்கு கொடுத்திருந்தது கல்லுக்கூட்டத்தில் உள்ள ஒரு வயதான நபருக்கு தான் வாடகைக்கு கொடுத்திருந்தேன். பிரதிவாதிக்கு வாடகைக்கு கொடுக்கவில்லை. என்னுடைய கடையை வாடகைக்கு கொடுத்ததை காண்பிக்க ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்தேனா என்றால், ஆவணங்கள் எதுவும் இல்லை. அதனால் தாக்கல் செய்யவில்லை.பிரதிவாதி 15 வருடங்களாக எனது கடையில் வாடகைக்கு இருந்தார் என்றாலும், ஒவ்வொரு 11 மாதங்களுக்கு ஒரு முறை வாடகை ஒப்பந்தத்தை புதுப்பித்து வந்தார் என்றாலும், சரியல்ல. அவர் என்னுடைய கடையில் வாடகைதாரர் கிடையாது. இதுவரை ஒரு ரூபாய் கூட வாடகை கொடுத்தது கிடையாது. 18.08.2022 அன்று வாடகை ஒப்பந்தத்தை புதுப்பிப்பதற்காக பிரதிவாதி வாங்கி கொடுத்த ஆவணத்தை வைத்து நான் போலியாக கடன் உறுதி சீட்டாக தயார் செய்து கொண்டேன் என்றால், சரியல்ல.

நானும் பிரதிவாதியும் எந்த வாடகைக்கு ஒப்பந்தமும் போட்டுக் கொண்டது கிடையாது. பிரதிவாதி என்ன அவசியத்திற்காக பணத்தை கேட்டார் என்றால் அவருடைய சொந்த அவசியத்திற்காக பணம் தேவைப்படுகிறது. என்று கேட்டார் எப்ப கேட்டாலும் திருப்பி கொடுத்துவிடுகிறேன் என்று சொன்னார். சொந்த அவசியம் என்ன என்று எனக்குத் தெரியாது, என்றால் எனக்கு ஒன்றுமே தெரியாது. என்ன அவசியம் என்று விவரத்தை தெரிந்து கொள்ளாமல் எந்த ஒரு நபரும்

பணத்தை கொடுக்க மாட்டார்கள் என்றால், அவர் என்னுடைய நெருங்கிய நண்பர் என்பதால் கேட்டவுடன் நான் கொடுத்தேன். இந்த வழக்கு பிரச்சனைக்கு முன்பாகவோ அல்லது பின்பாகவோ நானோ அல்லது பிரதிவாதியோ பணம் கொடுக்கல் வாங்கியது தொடர்பாக ஏதாவது ஆவணத்தை தாக்கல் செய்ய முடியுமா என்றால், நானோ அல்லது அவரோ எனக்கு பணம் கொடுத்தது வாங்கியது கிடையாது அதனால் எந்த ஆவணமும் எங்களிடம் இல்லை.

இந்த வழக்கு தொகை உட்பட எந்த காலத்திலும் எனக்கும் பிரதிவாதிக்கும் கொடுக்கல், வாங்கல் இருந்தது கிடையாது என்றால் இந்த ரூ.3,00,000/− தான் என்னுடைய கொடுக்கல் வாங்கல். என்னிடம் வாடகைக்கு இருந்த பிரதிவாதி கடையை காலி செய்து விட்டு அவர் கொடுத்த முன் தொகையை திருப்பி கேட்டதற்கு கொடுக்காமல் அவரிடம் இருந்து ஏற்கனவே பெற்றுக் கொண்ட முத்திரைத்தாளை போலியாக இந்த வழக்கிற்காக தயார் செய்து கொண்டேன் என்றால், சரியல்ல இந்த பத்திரம் மட்டும் தான் உண்மையான பத்திரம். நான் இந்த வழக்கில் பிரதிவாதியிடம் பலமுறை பணத்தை பல நபர் மூலமாக திருப்பி கேட்டேன் என்று சொல்லி இருப்பதற்கு, நானும் என் மனைவி மட்டும் தான் கேட்டோம் வேற யாரும் கேட்கவில்லை. இந்த கொடுக்கல் வாங்கல் யார் யாருக்கு தெரியும் என்றால் எனக்கும் என் மனைவிக்கும் தெரியும், பால் வாங்க வந்த நபருக்கும் தெரியும்.

பால் வாங்க வந்த நபரை இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்கலாம் என்றால், ஆமாம். வா.சா.ஆ.1 சட்டப்படி செல்லத்தக்க ஆவணம் இல்லை, என்பதால் அதன் அடிப்படையில் எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்கக்கூடியது இல்லை என்றால், சரியல்ல. எனக்கு உண்மையான உரிமை உள்ளது. வழக்கில் பிரதிவாதிக்கு நான் வழக்கு அறிவிப்பு அனுப்பிய பிறகு பிரதிவாதி என்னை வந்து பார்த்து ஏன் இப்படி அனுப்பினீர்கள் என்று கேட்டார் என்றால், அவர் வந்து என்னிடம் காசை இப்போ தருகிறேன், அப்போது தருகிறேன் என்று சொன்னதால் உடனடியாக நான் நீதிமன்றத்திற்கு செல்லவில்லை. பிரதிவாதியிடம் நான் நமக்குள் உள்ள கடை வாடகை பிரச்சினை பேசி தீர்த்துக் கொள்ளலாம் என்று சொன்னதால் பிரதிவாதி எந்த பதிலும் அனுப்பவில்லை என்றால், கடைக்கும், பிரதிவாதிக்கும் எந்த சொந்தமும் உரிமையோ இல்லை. இந்த

பிரதிவாதி என்னிடம் எந்த காலத்திலும் பணம் வாங்கியதில்லை என்பதால் பணத்தை திருப்பிக் தர கடமைப்பட்டவர் இல்லை என்றால், சரியல்ல. 2022 ம் வருடம் 8 ம் மாதம் 18 ஆம் தேதி வாங்கியது உண்மை. வா.ச.ஆ.1 ல் மாதந்தோறும் வட்டி தர வேண்டும் என்ற வாசகம் இருக்கிறது என்றால், ஆமாம். அதன்படி எவ்வளவு நாட்கள் வட்டி கொடுத்தார் என்றால், ஒரு நாட்கள் கூட வட்டி தரவில்லை என்னை ஏமாற்றி விட்டார்.

உண்மையிலேயே பிரதிவாதி கடன் பெற்று மாதவட்டிகளை தராமல் இருந்திருந்தால் நான் வா.சா.ஆ.1 ஏற்பட்ட காலத்திலிருந்து 2 1/2 வருட காலம் காத்திருந்து வழக்கு தாக்கல் செய்திருக்க மாட்டேன் என்றால் சரியல்ல அவர் என்னுடைய நண்பர் என்பதால் காலதாமதமாக தாக்கல் செய்தேன். கடை வாடகைக்கு விட்டதற்காக கொடுக்கப்பட்ட ஆவணத்தை வைத்து பொய்யாக புனைந்து இந்த வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், இல்லை. இந்த வழக்கில் எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்கக்கூடியது இல்லை என்றாலும் பிரதிவாதிக்கு வழக்கில் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றாலும், சரியல்ல. நான் பிரதிவாதிக்கு காசு கொடுத்து இருக்கிறேன் அந்த காசை அவர் என்னிடம் கொடுக்க வேண்டும்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.